**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of BNSS)**

**ST.C. No. 24/2024**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஷேக் முஜிபுர் ரஹ்மான் | Date | : | 25.11.2025 |
| Father Name | : அப்துல்லா | | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. நான் காரைக்காலில் வசித்து வருகிறேன். எதிரியை எனக்கு 2016 ம் ஆண்டு முதல் தெரியும். எதிரியை எனக்கு யார் மூலமாக தெரியும் என்றால் அப்துல் காதர் மூலமாக தெரியும். எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எதிரி FAV Traders ஐ எத்தனை வருடங்களாக நடத்தி வருகிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு காசோலைகள் நான் எதிரிக்கு எந்த தேதிகளில் கொடுத்தேன் என்று புகார் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் 10.12.2020 அன்று கொடுத்தாக சொல்லியுள்ளேன். எதிரி என்னிடம் எந்த தேதி மாதம் வருடத்தில் தொகை கேட்டார் என்ற விபரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு ரொக்கமாக பணம் எந்த தேதியில் கொடுத்தேன் என்று தேதியை குறிப்பிட்டு புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். .

2. இரண்டு காசோலைகள் மற்றும் 5 லட்சம் பணத்தையும் எதிரியிடம் எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் எதிரிக்கு தொகை கொடுத்த விபரம் யாருக்கு தெரியும் என்றால் எனது மனைவி அல்ஜசிரா பர்வீன் மற்றும் எனது மகன் அப்துல்லா பஹர் ஆகியோருக்கு தெரியும். மேற்படி விபரத்தை எனது புகாரிலும், வழக்கிறஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் 2005 முதல் ரியல் எஸ்டேட் தொழில் செய்து

வருகிறேன். மனை பிரிவு( Lay Out) போட்டுக்கொடுக்கிறேன். மேற்படி விபரத்தை எனது புகாரிலும், வழக்கிறஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி தொழிலின் மூலம் எனக்கு வருடத்திற்கு ரூ. 50 முதல் ரூ. 60 லட்சம் வரவு செலவு செய்யப்படும்.

3. எதிரிக்கு நான் கொடுத்த தொகை எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் செம்பனார்கோவிலில் உள்ள கலைமகள் கல்வி நிறுவனத்தினர் என்னிடம் இடம் வாங்கியதற்காக எனது வங்கி கணக்கிற்கு ரூ. 25 லட்சம் பணம் செலுத்தியிருந்தார்கள். அந்த பணத்தை தான் நான் எதிரியிடம் கொடுத்தேன். நான் எனது வருமானத்திற்கு வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். நான் வருமான வரி செலுத்தியதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு கடன் கொடுத்த அன்று அவரிடமிருந்து காசோலை பெற்றுக்கொண்டேனா என்றால் 1 காசோலை பெற்றுக்கொண்டேன். காசோலை எண் தற்போது நினைவில் இல்லை. காசோலையை எவ்வளவு தொகை நிரப்பி பெற்றுக்கொண்டேன் என்றால் ரூ. 25 லட்சம் என குறிப்பிட்டு கடன் கொடுத்த அன்றைய தினமே பெற்றுக்கொண்டேன். காசோலை தொகையை தவிர எதிரி வேறு தொகை ஏதேனும் என்னிடம் கடன் பெற்றுள்ளாரா என்றால் இல்லை. கடன் தொகையில் ஏதேனும் தொகையை என்னிடம் எதிரி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

4. எனது பெயரில் எத்தனை வங்கி கணக்கு உள்ளது என்றால் நான் எதிரிக்கு கடன் கொடுத்த சமயத்தில் எனக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பொறையார் கிளையில் மட்டும் வங்கி கணக்கு இருந்தது. தற்போது ICICI Bank Karaikal and IDBI, Karaikal ஆகியவற்றிலும் வங்கி கணக்குகள் உள்ளன. இந்தியன் ஓவர்சிஸ் வங்கியின் கணக்கு எண் 28300100002785 ஆகும். மற்ற இரண்டு வங்கிகளின் வங்கி கணக்கு எண் நினைவில் இல்லை. இந்தியன் ஓவர்சிஸ் வங்கியின் கணக்கு எண் 28300100002787 எனது வங்கி கணக்கா என்றால் இல்லை. இந்தியன் ஓவர்சிஸ் வங்கியின் கணக்கு எண் 28300100002784 என்பது எனது வங்கி கணக்கு எண் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் ரூ. 25

லட்சம் கடன் பெறவில்லை என்றாலும் ரூ. 20 லட்சம் மட்டுமே கடன் பெற்றார் என்றாலும் சரியல்ல. எதிரி வாங்கிய ரூ. 20 லட்சத்தில் ரூ. 13 லட்சத்தை வங்கி கணக்கு மூலமாக எதிரி என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேலும், ரூ.25 லட்சத்தை எதிரி எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் பெற்ற தொகையான ரூ. 20 லட்சத்துக்கு ரூ.18 லட்சம் சேர்த்து இதுவரை ரூ. 38 லட்சம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

5. நான் எனது வங்கி கணக்கின் விபரபட்டியலை 2025 ம் ஆண்டு வரை தாக்கல் செய்தால் எதிரி எனக்கு பணம் செலுத்திய விபரம் தெரியவந்துவிடும் என்பதால் 2020 ம் ஆண்டு வரையிலான விபரபட்டியலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விரபங்களை மறைத்துவிட்டு இந்த வழக்கு காசோலையில் நானே தொகையை பூர்த்தி செய்துகொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் பெற்ற தொகைக்கு அதிகமான தொகையை செலுத்திவிட்டார் என்றாலும், அவரிடமிருந்து மேலும் பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் காசோலையை நானே பூர்த்தி செய்துள்ள விபரம் தெரிந்ததால் தான் எதிரி அவரது வங்கியை அணுகி Stop Payment கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

6. நான் எதிரிக்கு கொடுத்த பணத்தை அவரிடம் திருப்பி கேட்டேனா என்றால் கேட்டேன். எந்த தேதியில் கேட்டேன் என்றால் தேதி நினைவில் இல்லை. 2023ம் ஆண்டு ஆரம்பம் முதலே கேட்டேன். மேற்படி விரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரியிடம் கடனை திருப்பி கேட்டு அவர் திருப்பி கொடுக்காததால் காசைசோலையை வசூலுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யான வழக்கு என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.